Date: 12.03.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

Os. 126/2023

வா.சா.1

**<u>பெயர்-</u>** திரு. ஜாபர்சேட்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இந்த வழக்கு கடன் குறித்து இடைத்தரகராக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் பதிவு செய்யப்படாத அக்ரிமெண்ட் ஆவணத்தை எழுதி பெற்றவர் ஆவேன். என் பெயரில் நேரடியாக கிரைய உடன்படிக்கை உள்ளதா என்றால் என் நண்பர் பெயரில் உள்ளது. அதுவும் பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் படிவம் ஆகும். எனது பதிவு செய்யப்படாத பங்குதாரரான வேறு ஒருவர் சொத்துக்கு நான் இடைத்தரகராக நின்று வாங்கி தந்தேன் என்றால் சரியல்ல. நான் இடைத்தரகராக இல்லை. சொத்தின் உரிமையாளர் பிரதிவாதிக்கு சொத்தை எழுதி பதிவு செய்தபோது நான் பதிவு அலுவலகத்தில் ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் ஆட்சேபணை தெரிவிக்கில்லை. கடன் பத்திர வழக்கை எதை வைத்து தொடர்ந்துள்ளேன் என்றால் கடன் பத்திரத்தை வைத்து தான் போட்டுள்ளேன். நான் ஏன் காசோலையையோ அல்லது புரோநோட்டையோ எழுதிவாங்கவில்லை என்றால் மறுகிரையத்திற்கு காத்திருந்தேன். ஆனால் அவர்கள் வரவில்லை. நான் நிலம் விற்றவர்களுக்கு நேரடியாக வரசொல்லி தான் பணம் கொடுத்தேன். அவர்களுக்கு பணம் கொடுத்தற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அவர்கள் ஆவணம் எதையும் எழுதிக்கொடுக்கவில்லை. நிலத்தின் உரிமையாளரிடம் பிரதிவாதி சொத்தை கிரையம் பெறும்போது இடத்தின் உரிமையாளரிடம் நான் ஏன் சொத்து பதிவிற்கு 2012ம் ஆண்டு கொடுக்கப்பட்ட பதிவு செய்யப்படாத ஆவணத்திலுள்ள வாதியின் பங்குதாரர் இடத்தின் உரிமையாளர் மீது ஆவணம் பதிவகத்தில் தடை மனு ஏன் கொடுக்கபடவில்லை என்றும், அது

சம்மந்தமாக இடத்தின் உரிமையாளர் பதிவு செய்யப்படாத வாதியின் பங்கு தாரருக்கும் இடைப்பட்ட வேறு ஒரு காரணத்திற்காக ஏன் பிரதிவாதி பதிவு செய்யும்படும் போது ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை என்று கேட்டால் தடை மனு கொடுப்பதற்கான அவசியம் ஏற்படவில்லை. சொத்து எங்களது கட்டுபாட்டிலேயே இருந்ததால் தான் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. உடனிருந்து நாங்கள் கிரையம் பெற்றுக்கொடுத்தோம். எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொத்து என் கட்டுபாட்டில் இருந்தது என்று சொல்கிறேன் என்றால் இந்த கிரையம் உடன்படிக்கை படி தான் சொல்கிறேன். சொத்து எனது சுவாதீனத்தில் இருந்தது என்பதற்கு ஆவணம் வைத்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் பெயரில் பட்டா எதுவும் இல்லை. நான் கிரையத்தை பதிவு செய்தபிறகு 10 நாட்களுக்குள் பணம் கொடுக்கவில்லை என்று ஏன் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கவில்லை. அந்த சொத்தை கிரையம் பெற்றபிறகு எத்தனை நாட்கள் கழித்து இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சுமார் 1 வருடம் கழித்து இந்த வழக்கை போட்டுள்ளேன்.